கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் வருடம் மார்ச் மாதம் 18ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.2/2020
இன்
அசல் வழக்கு எண்.76/2019
* * * *

பரிமளாதேவி ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. கண்ணன்
2. இரமேஷ்பாபு
3. தினகரன் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது 09.03.2026–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் முன்

பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்நிர் இடைநிலை மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கின் வழக்குரையில் சில சீர்திருத்தங்களை செய்யவேண்டி இம்மனுவானது கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைநிலை மனுவில் கோரியுள்ள சீர்திருத்தங்களில் 3,4 சீர்திருத்தங்களை செய்ய மட்டுமே மனுதாரர்/வாதியை அனுமதிக்கவேண்டும் என்றும், 1,2,5,6 ஆகிய சீர்திருத்தங்களை செய்ய அனுமதிக்கக்கூடாது என்று தங்களது ஆட்சேபனையை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

3.1) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்நிர் இடைநிலை மனுவானது அசல் வழக்கின் வழக்குரையில் சில சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியது அவசியமானது என்று குறிப்பிட்டு மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) மேலும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் கீழ்க்கண்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**i) வழக்குரையின் 4வது பாராவில் 2வது வரியில் "வாதி மற்றும் பிரதிவாதிகள் குடும்பத்திற்குரிய" என்று உள்ளதை நீக்கிவிட்டு "வாதியின் கணவர் மற்றும் அவருடைய உடன்பிறந்த சகோதரர்களுக்கு பாத்தியப்பட்ட" என்று சேர்க்கவேண்டும் என்றும்,**

**ii) வழக்குரையின் 5வது பாராவில் 1வது வரியில் "பிரதிவாதிகள் அனைவரும் உடன்பிறந்த சகோதரர்கள்" என்பதை நீக்கிவிட்டு "பிரதிவாதிகள் அனைவரும் வாதியின் கணவரின் மாற்றந்தாய் வழி சகோதரர்கள் (Step brother") என்று சேர்க்கவேண்டும் என்றும்,**

**iii) வழக்குரையின் 6வது பாராவில் 2வது வரியில் "2வது பிரதிவாதி" என்பதை நீக்கிவிட்டு "3வது பிரதிவாதி" என்று சேர்க்கவேண்டும் என்றும், மேலும் அதே பாராவில் 4வது வரியில் "3வது பிரதிவாதி" என்று உள்ளதை நீக்கி விட்டு "2வது பிரதிவாதி" என்று சேர்க்கவேண்டும் என்றும்,**

**iv) வழக்குரையின் 7வது பாராவின் 18வது வரியில் "மற்றும் பிரதிவாதிகள் உள்பட அனைவருக்கும்" என்று இருப்பதை நீக்கிவிட்டு "மற்றும் கணவரின் உடன்பிறந்த சகோதரர்களுக்கு பாத்தியப்பட்ட பொது இடம் 20 சென்ட் ஆகும். பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது" என்று சேர்க்கவேண்டும் என்றும்,**

**v) வழக்குரையின் 8வது பாராவில், 7,10,15,16,22 ஆகிய வரிகளில் "2வது" என்பது "3வது" என்று சேர்க்கவேண்டும் என்றும், 10வது பாராவில் 7வது வரியில் "2010–ம்" என்று உள்ளதை "2001–ம்" என்று சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

3.3) மனுதாரர்/வாதியின் இந்நிர் இடைநிலை மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்வது

பற்றி பரிசீலிக்கையில், மனுதாரர்/வாதி தரப்பில், இந்நிர் அசல் வழக்கானது 2019 ஆண்டு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேலும், இம்மனுவானது அசல் வழக்கின் வழக்குரையின் பொருண்மைகளில் சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மேற்படி மனுதாரர்/வாதி கோரியுள்ள சீர்திருத்தங்களில் 3,4 சீர்திருத்தங்களை செய்ய மட்டுமே மனுதாரர்/வாதியை அனுமதிக்கவேண்டும் என்றும், 1,2,5,6 ஆகிய சீர்திருத்தங்களை செய்ய மனுதாரர்/வாதியை அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்துள்ள காரணமானது சட்டப்படியானதாகவும், ஏற்கத்தக்கதாக இல்லாத நிலையிலும், மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்நிர் இடைநிலை மனுவில் கோரியுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்வதன்மூலம் வழக்குத்தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு மேற்படி சீர்திருத்தங்கள் அவசியமானதாகவும் சட்டப்படியானதாகவும் இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

3.4) மேலும், இந்நிர் சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தங்கள் செய்யும்பட்சத்தில் தரப்பினர்களுக்கு எவருக்கும்

பாதகமோ சாதகமோ ஏற்படாது என்பதை கருத்தில்கொண்டும், **Singarajan and 3 others, Vs., Jesudurai and another 2024 (1) MWN (Civil) 410, Dated:14.09.2023** என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் முன்தீர்ப்பு வழக்கில் கூறப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்றியும், தரப்பினர்களுக்கு இடையே பல வழக்குகள் தாக்கல் செய்வதை தவிர்க்கும்விதமாகவும் மேற்படி சீர்திருத்தமானது அவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மேற்படி சீர்திருத்தங்களானது அவசியமானது மற்றும் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று தீர்மானித்துள்ள நிலையிலும், இந்நிர் மனுதாரர்/வாதியின் இந்நிர் இடைநிலை மனுவில் கண்டவாறு சீர்திருத்தங்கள் செய்வது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் தரப்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைநிலை மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு,

என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 18:12:19 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

<u>**இணைப்பு: –**</u>

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 18:12:25 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.2/2020
இன்
அசல் வழக்கு எண்.76/2019
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 18.03.2026